டொமினிகா



# ஓய்வுநாளும், எழும் பிரச்சினைகளும்

*மாணவர்கள் கிறிஸ்துவைப் பின்பற்றத் தீர்மானிக்கும்போது பெற்றோர் சிலசமயங்களில் எதிர்க்கிறார்கள்.*

இவ்வார ஊழிய அறிக்கை, டொமினிகாவின் தலைநகரான ரோசாவில் உள்ள எபேனேசர் செவந்த்-டே அட்வென்டிஸ்ட் ஆரம்பப் பள்ளியிலிருந்து வருகிறது. அந்தப் பள்ளி 1976இல் ஆரம்பிக்கப்பட்டது; அந்தத் தீவிலுள்ள 62 ஆரம்பப்பள்ளிகளில், சிறந்த முதல் 10 பள்ளிகளின் பட்டியலில் தொடர்ந்து இடம் பிடித்து வருகிறது. மழலையர் வகுப்பு முதல் நான்காம் வகுப்பு வரை 160 சிறுவர்கள் படிக்கிறார்கள்; பள்ளியில் கட்டிட வசதி குறைவாக உள்ளது. பல கட்டிடங்கள் தள்ளியுள்ள வேறொரு கட்டிடத்தில், ஐந்தாம் மற்றும் ஆறாம் வகுப்புகளைச் சேர்ந்த 40 மாணவர்களுக்கு வகுப்புகள் நடத்தப்படுகின்றன. பல பெற்றோர் அந்தப் பள்ளியில் தங்கள் பிள்ளைகளைச் சேர்க்க விரும்பியும், இடவசதி இல்லை. பள்ளியை பெரிதாகக் கட்டுவதற்கு இந்தக் காலாண்டின் பதின்மூன்றாம் வாரக் காணிக்கையின் ஒரு பகுதி பயன்படும்.

இந்த வாரம் இரண்டு மாணவர்களின் சம்பவங்களைப் பார்ப்போம்.

எபனேசர் அட்வென்டிஸ்ட் ஆரம்பப்பள்ளியில் படித்த சூசென்னேவுக்கு மழலையர் வகுப்பில் நல்ல பயிற்சி கிடைத்தது. அதனால் ஒன்றாம், இரண்டாம், மூன்றாம் வகுப்புகளிலும் அவளை அங்கேயே பெற்றோர் படிக்க வைத்தார்கள்.

நான்காம் வகுப்பிற்கு வந்தபோது, அவளுடைய அப்பா பள்ளி முதல்வரைச் சந்தித்தார்.

“ஒரு பிரச்சினை” என்று இருக்கத்தோடு கூறினார்.

முந்தின வார இறுதியில், தன் 9வயது மகளிடம், பாத்திரங்களைக் கழுவும்படி சொல்லியிருக்கிறார், அவள் மறுத்துவிட்டாள்.

“இன்றைக்கு ஓய்வுநாள், அத

னால் பாத்திரங்களைக் கழுவமாட்டேன்'' என்று சொன்னாள்.

அப்பாவுக்கு அதிர்ச்சியாக இருந்தது. அவர் மீண்டும் அவளிடம் அந்த வேலையைச் செய்யச் சொன்னார்.

ஆனால் சூசன்னெ மீண்டும் மறுத்துவிட்டாள்.

''சூரியன் மறைந்த பிறகு செய்கிறேன்'' என்று சொன்னாள்.

'ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக; ஆறுநாளும் நீ வேலைசெய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக; ஏழாம்நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்; அதிலே நீயானாலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், ... யாதொரு வேலையும் செய்யவேண்டாம்' என்று நான்காம் கற்பனை சொல்லுவதாக பள்ளிக்கூடத்தில் படித்ததாகச் சொன்னாள். யாத் 20:8-10. தேவனுடைய கற்பனையில் சொல்லப்பட்ட மகளாக அவள் தன்னைக் கருதினாள். பாத்திரங்கள் கழுவுவதை வேலையாகக் கருதினதால், அந்த வேலையைச் செய்யாமல், ஓய்வுநாளை பரிசுத்தமாக ஆசரிக்க விரும்பினாள்.

அப்பா வருத்தமடைந்தார்; திங்கட்கிழமை காலையிலேயே பள்ளி முதல்வரைச் சந்தித்து புகார் தெரிவித்தார்.

''என்னுடைய வீட்டில் இரு மார்க்கங்கள் இருக்க விரும்பவில்லை. என் மகளை அட்வெண்டிஸ்டாக மாற்றுவதற்கு அட்வெண்டிஸ்ட் பள்ளிக்குஅனுப்பிவைக்கவில்லை'' என்று சொன்னார்.

அவ்வாறு சொல்லிவிட்டு, அவளை வேறொரு பள்ளிக்கு மாற்றினார்.

- - - - - - - - - - - - - - - - - - - -

ஜேக் என்கிற மாணவனும் எபனேசர் அட்வெண்டிஸ்ட் ஆரம்பப் பள்ளியில் மழலையவர் வகுப்பில் தான் சேர்ந்தான். ஆனால் கல்வியாண்டு தொடங்கி, ஆறுமாதங்கள் சென்ற பிறகு, சேர்ந்தான். ஜேக் வந்தபோது ஆசிரியர் பத்துக் கற்பனைகள்பற்றி நடத்திக் கொண்டிருந்தார்; 'விபசாரம் செய்யாதிருப்பாயாக' என்கிற ஏழாவது கட்டளை அவனது கவனத்தை ஈர்த்தது. யாத் 20:14. ''சிலர் திருமணம்பண்ணாமலேயே சேர்ந்து வாழ்கிறார்கள். அவ்வாறு செய்வது தேவனுக்கு விருப்பமானது அல்ல; இருவரும் திருமணம் செய்து, ஒரே மாம்சமாகி சேர்ந்து வாழவேண்டும். திருமணத்திற்கு முன் பழகுகிற சமயத்தில் சேர்ந்து வாழக்கூடாது. அவர்கள் திருமணம்பண்ண வேண்டும்'' என்று ஆசிரியர் சொன்னார்.

ஜேக் வீட்டிற்குச் சென்றதும் அம்மாவிடம், 'அம்மா நீங்கள் அப்பாவைத் திருணம் செய்தீர்களா?'' என்று கேட்டான்.

''இல்லை'' என்று அம்மா சொன்னார்.

''அம்மா, நீங்கள் பாவம் செய்கிறீர்கள். நாம் பாவத்தில் வாழக்கூடாது என்று ஆசிரியர் சொன்னார். நீங்கள் திருமணம்பண்ண வேண்டும்'' என்று ஜேக் சொன்னான்.

அம்மாவுக்கு அதிர்ச்சியாக இருந்தது. அவருக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. வாழ்க்

கையில் தான் செய்த தீர்மானங்களை எல்லாம் யோசித்துப் பார்த்தார். ஒரு யோசனை தோன்றியது. "ஜேக், நீ என்னிடம் சொன்னதை எல்லாம் அப்பா வந்த பிறகு அவரிடம் சொல்" என்று கூறினார்.

அப்பா வீட்டிற்கு வந்ததும், ஜேக் அவரிடம், "அப்பா, நீங்கள் அம்மாவைத் திருமணம் செய்தீர்களா?" என்று கேட்டான்.

அப்பாவுக்கு அதிர்ச்சியாக இருந்தது; "இல்லை, ஏன் கேட்கிறாய்?" என்று கேட்டார்.

"ஒரு ஆண் இன்னொரு பெண்ணுடன் திருமணம் பண்ணாமல் சேர்ந்து வாழக்கூடாது என்று இன்று ஆசிரியர் வகுப்பில் கூறினார். அப்பா, நீங்கள் பாவத்தில் வாழ்கிறீர்கள். நீங்கள் திருமணம் பண்ணவேண்டும்" என்று சொன்னான்.

அம்மாவிடம் மனம்விட்டுப் பேசவேண்டும் என்று அப்பா தீர்மானித்தார். சீக்கிரமே இருவரும் திருமணம்பண்ணினார்கள்.

அம்மா இந்தச் சம்பவத்தை பள்ளி முதல்வரிடம் சொன்னார். ஜேக் சொன்ன பிறகுதான் தாங்கள் இருவரும் திருமணம் செய்ததாகக் கூறினார்.

பள்ளி முதல்வரான உர்ஸுலா லெஸ்லி, எல்லா மாணவர்களுக்கும் வேதாகமத்தைக் கற்றுக்கொடுப்பதை தாங்கள் ஊழிய நோக்கமாகக் கொண்டுள்ளதாகச் சொன்னார். அதன்பிறகு நடக்கவேண்டியதை பரிசுத்த ஆவியானவரிடம் விட்டு விடுவதாகக் கூறினார்.

"மாணவர்கள் கிறிஸ்துவைப் பின்பற்றத் தீர்மானிக்கும்போது பெற்றோர் சிலசமயங்களில் எதிர்க்கிறார்கள். இது நாங்கள் எதிர்கொள்ளுகிற சவால்களில் ஒன்று. சில மாணவர்கள் ஞானஸ்நானம் பெற விரும்புகிறார்கள். ஆனால் அவர்கள் நல்ல விழுமியங்களைக் கற்றுக்கொண்டால் மட்டும் போதும், அதற்குமேல் ஒன்றும் தேவையில்லை என்று நினைக்கிறார்கள்" என்று சொன்னார்.

ஆனால் பிள்ளைகள் மூலம் சத்தியத்தை ஏற்றுக்கொண்ட பெற்றோர் பற்றிய சம்பவங்களும் உள்ளன. பிள்ளைகள் மற்றும் பெற்றோர் மனதில் ஊன்றப்படுகிற சத்தியத்தின் விதைகள் என்ன விளைவுகளை உண்டாக்கின என்பதை நித்தியம் மட்டுமே வெளிப்படுத்த முடியும்.

பிள்ளைகள் மற்றும் பெற்றோரின் உள்ளங்களில் ஊன்றப்படுகிற விதைகள் கனி கொடுக்க வேண்டுமென எபினேசர் செவந்-டே அட்வென்டிஸ்ட் ஆரம்பப்பள்ளிக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். உதாரத்துவமாக பதின்மூன்றாம் வாரக் காணிக்கை கொடுப்பதற்காக நன்றி.

## கதைக் குறிப்புகள்

- உர்ஸுலா லெஸ்லியின் ஒரு சிறிய காணொளியை யூடியூபில் காண்பதற்கு: bit.ly/Ursula-IAD.
- முகநூலிலிருந்து புகைப்படங்களைப் பதிவிறக்க: bit.ly/fb-mq.